2 பக்கங்கள் 15 காசுகள்

தீக்கதிர்

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) நாளிதழ்

பதிவு எண் எம். 8798

கதிர் 13 மதுரை 27—6—75 வெள்ளி மலர் 124

சிமிண்ட் நிர்வாகங்களின் விலை உயர்வு கோரிக்கை உடனடியான பரிசீலனை

புதுடெல்லி, ஜூன். 23—

சிமிண்டின் விலை டன்னுக்கு 15 ரூபாய் கூடுவதென மத்திய அரசு முடிவு செய்துள்ளதாகத் தெரிகிறது. டன் ஒன்றுக்கு ரூ 25 வீதம் கூட்டவேண்டுமென சிமெண்ட தொழிற்சாலைகள் சார்பாக கோரப்பட்டது, உடனே சம்பந்தப்பட்ட மத்திய அமைச்சர்கள் கூடி அக்கோரிக்கை பரிசீலிக்கப்பட்டது பரிசீலனைக்குப்பின் ரூ 15 கூட்டலாம் என முடிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

கோவையிலும் பஸ் மறியல் ஆரம்பம்

கோவை ஜூன். 25

கோவையிலும் பஸ் மறியல் இன்று (புதன்) முதல் துவங்கியது:

அரசுப்போக்கு வரத்து பஸ்நிலைய வாசலில், நாக[illegible] கோவிலுக்கும், திருச்சிக்கும் புறப்பட்ட பஸ்கள் முன் பழனிச்சாமி தலைமையில் குப்புசாமி, தாசன், ராமகிருஷ்ணன், குஞ்சுவரீது, ஆனந்தன், ராதாகிருஷ்ணன் ஆகியோர் மறியல் செய்தனர், அவர்களை போலீசார் கைது செய்தனர்,

மறியல் துவங்கியதும், பஸ்களில்இருந்த பிரயாணிகள் பஸ்களை விட்டுகீழேஇறங்கி ஒதுங்கி நின்றனர்

சுப்ரீம் கோர்ட்டின் உத்தரவுக்குப் பின்னும்

இந்திரா காந்தி பிரதமராக நீடிப்பது

ஜனநாயக மரபுகளுக்கு அவமதிப்பு

உடனே ராஜினுமா செய்ய இ.எம்.எஸ்., ஜோதிபாசு வற்புறுத்தல்

புதுடெல்லி, ஜூன். 25—

இந்திரா காந்தி தேர்தல் வழக்கில், பாரத தலைமை நீதி மன்றம் (சுப்ரீம் கோர்ட்) நிபந்தனையுடன் கூடிய தடை (ஸ்டே) உத்தரவு பிறப்பித்துள்ள நிலையிலும், இந்திராகாந்தி தொடர்ந்து பிரதமராக நீடிப்பதற்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் தோழர்கள் இ எம் எஸ் நம்பூதிரிபாட், ஜோதிபாசு ஆகியோரும் எதிர்க் கட்சிகளைச்சேர்ந்த தலைவர்களும், இந்திரா காங்கிரசைச் சேர்ந்த 30 எம் பி-க்களும் வன்மையான எதிர்ப்பும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

அலகாபாத் உயர்நீதிமன்றத் தீர்ப்பு வந்தவுடனேயே ராஜினுமாச் செய்திருக்க வேண்டிய இந்திராகாந்தி, இப்போதாவது பிரதமர் பதவியிலிருந்து உடனே ராஜினுமாச் செய்ய வேண்டும் என்றும் வற்புறுத்தியுள்ளார்கள்.

இந்திரா உடனே ராஜினுமாச் செய்ய வேண்டும் என்று மார்க்சிஸ்ட கம்யூனிஸ்ட கட்சியின் அரசியல் தலைமைக்குழு உறுப்பினர்கள் தோழர்கள் இ. எம். எஸ், நம்பூதிரிபாடும், ஜோதிபாசுவும் அறிவித்துள்ளனர்.



இ எம் எஸ் நம்பூதிரிபாட்

சுப்ரீம்கோர்ட் தீர்ப்பு குறித்துகொச்சியில் தோழர் இ. எம். எஸ் ஸிடம்செய்தியாளர்கள் கருத்துக் கேட்டபோது, அவர் கூறியதாவது:—


நடைமுறையில் எல்லா வகையிலும் இந்திரா காந்தி நாடாளுமன்ற உறுப்பினராகச் செயல்பட முடியாது என்பதை சுப்ரீம் கோர்ட்டின தீர்ப்பு தெளிவாக்கியுள்ளது.

இநநிலையிலும் இந்திராகாந்தி தொடர்ந்து பிரதமர் பதவியில் நீடிப்பது என்பது, ஜனநாயக மரபுகளை அவமதிப்புக்கு உள்ளாக்குவதாகும்.

எனவே அலகாபாத் உயர்நீதி மன்ற தீர்பபு குறித்து இந்திராகாந்தி செய்துள்ள அப்பீலின் மீது சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு கூறும வரை அவர் பதவி விலகிக் கொள்ள வேண்டும்: இந்திரா காங்கிரசின் பார்லிமெண்டரி கட்சி புதிய தலைவரைத் தேர்நதெடுப்பதே முறையாகும்.

அவரது பதவி விலகல் உட்கட்சி பூசல் ஏற்படும் என்றால், அந்தக் கட்சி தொடர்ந்து ஆளும் கட்சியாக இருக்க தகுதியற்றது.

இவ்வாறு தோழர் நம்பூதிரிபாட் கூறினர்,



ஜோதிபாசு

கல்கத்தாவில், தோழர்ஜோதிபாசுவை செய்தியாளர்கள் சந்தித்தபோது அவர் கூறியதாவது:—

சுப்ரீம் கோர்ட் உத்தரவுக்குப்பின்னரும் இந்திராகாந்தி தொடர்ந்து பிரதமராக நீடிப்பாரேயானல். இந்தியாவில் ஜனநாயக மனப்பான்மையுள்ள யாரும் அதை சகித்துக்கொள்ளமாட்டார்கள்.

அவர் பிரதமராக நீடித்தால். அது இந்திய மக்களுக்கு இழுக்காகும்

இவ்வாறு தோழர் ஜோதிபாசு கூறினர்.

டெல்லி மார்க்சிஸ்ட் கட்சி

டெல்லிப்பிரதேச மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட கட்சியின் செயற்குழு விடுத்துள்ள ஓர் அறிக்கையில்-காலம் தாழ்த்தாமல் இந்திரா காந்தி ராஜினுமாச் செய்யவேண்டும் என்று வற்புறுத்தியுள்ளது.

இந்திராகாந்தி பதவியில் நீடிக்க வேண்டும் என்பதற்கு, தார்மீக ரீதியிலோ — அரசியல் ரீதியிலோ—சட்டரீதியிலோ—எந்தவொரு நியாயத்தையும் சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு அளிக்கவில்லை என்றும் அந்த அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

மது லிமாயி

அலகாபாத் உயர் நீதி மன்றத்தீர்ப்பின் மீது சுப்ரீமகோர்ட்டிலிருந்து "முழுமையான தடையுத்தரவு (ஸ்டே)" பெறுவதில் தோல்வியுற்றதால், இந்திராகாந்தி கண்ணியமான முறையில் தாமாக பதவியிலிருந்து ஓய்வு பெறவேண்டும் என்று சோசலிஸ்ட கட்சித்தலைவர் மதுலிமாயி எம். பி. புதுடெல்லியிலிருந்து விடுத்துள்ள அறிக்கையொன்றில் வற்புறுத்தியுள்ளார்.

பதவியில் தொங்கிக்கொண்டிருக்க அவர் செய்யும் எந்தவொரு முயற்சியும் நாட்டின் நலனுக்குத் தீங்கையே விளைவிக்கும் என்றும், அது காலப்போக்கில் அவரது புகழை முற்றாகச் சிதைத்துவிடும் என்றும் அவர் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

மது தாண்டவடே

சோசலிஸ்ட் கட்சியின் மற்றொரு தலைவரான மதுதாண்டவடே எம். பி. புதுடெல்லியில் செய்தியாளரிடம் கூறியதாவது:—

அலகாபாத் உயர்நீதிமன்றத் தீர்ப்புக்குப்பின் இந்திரா காந்தி பிரதமர் பதவியிலிருந்து ராஜினுமாச் செய்யவேண்டியது தார்மீக பொறுப்புணர்ச்சியாகும் தற்போது சுப்ரீம் கோர்ட் தீர்ப்பிறகும் பின்பு, அந்த தார்மீக பொறுப்புணர்ச்சி மேலும் அதிகமாகியுள்ளது.

எனவே, இந்திராகாந்தி உடனே ராஜினுமா செய்ய வேண்டும்; அரசியலில் ஜனநாயக மரபுகளை மதிக்கவேண்டும்.

எஸ். என். மிஸ்ரா

ஸ்தாபன காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ் என் மிஸ்ரா, இந்திரா காந்தி உடனே ராஜினுமா செய்ய வேண்டும என்று வற்புறுத்தியுள்ளார்.

மோகன் தாரியா

"அலகாபாத் உயர்நீதிமன்றத்தீர்ப்பு வந்தவுடனேயே பதவியிலிருந்து இந்திரா காந்தி விலகியிருக்க வேண்டும், அதுதான் பிரதமருக்குரிய புத்திசாலித்தனமான நடவடிக்கையாகும்; ஆனுல். இப்போது நிலைமை மிகவும் மோசமாகி விட்டது" என்று இந்திரா காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் மோகன் தாரியா குறிப்பிட்டார்.

காங்கிரஸ் எம் பிக்களே வற்புறுத்தல்

"சுப்ரீம் கோர்ட் நிபந்தனையுடன் கூடிய இடைக்காலத் தடையே அளித்திருப்பதால் பிரதமர் பதவியிலிருந்து இந்திரா காந்தி விலகிக்கொள்வதே உசிதம்" என்று புதுடெல்லியில் நடந்த இந்திரா காங்கிரஸ் எம் பிக்கள் கூட்டத்தில் கருத்து தெரிவிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் கலந்து கொண்ட 30 எம் பிக்களில்— மோகன்தாரியா, சந்திரசேகர், கிருஷ்ணகாந்த், ராம்தன், ரங்கநாத் செனய், லெட்சுமிகாந்தம்மா ஆகியோரது பெயர்கள் மட்டும்தான் வெளியிடப்பட்டன. ஏனையோர் பெயர்கள் வெளியிடப்படவில்லை.

சுப்ரீம் கோர்ட்டின் முன்னுள் நீதிபதி

சுப்ரீம் கோர்ட்டின் முன்னாள் நீதிபதியும், முன்னாள் வெளிவிவகார அமைச்சருமான எம் சி சாக்ளா, பம்பாயில் செய்தியாளரிடையே கூறியதாவது:—

அலகாபாத் உயர்நீதிமன்றத்தீர்ப்பின் மீது சுப்ரீம் கோர்ட் முழுத் தடை உத்தரவு அளிக்காதலால், இந்திரா காந்தி உடனே பிரதமர் பதவியை ராஜினுமாச் செய்ய வேண்டும்.

அவ்வாறு ராஜினுமாச் செய்வதுதான், அவரது சொந்த கவுரவத்தையும், அவர் வகித்து வரும் பதவியின கவுரவத்தையும உயர்த்தும்.

கருத்துக் கூற இந்திரா மறுப்பு

பிரதமர் இந்திரா காந்தியை, செய்தியாளர்கள் சந்தித்து சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு பற்றி கருத்துக் கூறும்படி கேட்டதற்கு, கருத்து எதுவும்கூற அவர் மறுத்துவிட்டார்.

ராஜ் நாராயணன்

இந்திரா தேர்தலை எதிர்த்து வழக்குத் தொடுத்துள்ள ராஜ் நாராயணனிடம் செய்தியாளர்கள் கருத்துக்கேட்ட போது, "எனக்கு சந்தோஷமுமில்லை; வருத்தமுமில்லை; ஆனல் இந்திராபிரதமராக நீடிக்க வேண்டுமென்று யாரேனும் நினைப்பார்களேயானுல், அவர்கள் இந்தியாவில்ஜனநாயகம் படுகொலையாவதற்கு உதவுகிறவர்கள் ஆவார்கள்" என்று குறிப்பிட்டார்.

நாடு முழுவதும் இயக்கம் எதிர்க்கட்சிகள் திட்டம்

சுப்ரீம் கோர்ட் நிபந்தனையுடன் கூடிய 'ஸ்டே' உத்தரவு பிறப்பித்துள்ள இநநிலையிலாவது இந்திரா காந்தி உடனடியாக பதவிவிலகவேண்டும்என்றும், அல்லாவிடில் ராஜினுமா செய்யும்படி வற்புறுத்தி சத்தியாக்கிரகம் உட்பட நாடுதழுவிய இயக்கம் நடத்தப்படும் என்றும் புதுடெல்லியில் கூடிய ஐந்து எதிர்க்கட்சிகளின் கூட்டுக் கூட்டம் முடிவு செய்துள்ளது.

ஸ்தாபனக் காங்கிரஸ், சோசலிஸ்ட் ஜனசங்கம், சுதந்திரா, பாரதீய லோக்தளம் ஆகிய கட்சிகளின் இக்கூட்டத்தில் ஜெயபிரகாஷ் நாராயணனும் மொரார்ஜி தேசாயும் கலந்து கொண்டனர்.

பிரதமராக நீடிக்கலாம்- ஆனல் ஓட்டுப் போடக் கூடாது

இந்திராவுக்கு சுப்ரீம் கோர்ட் உத்தரவு

புதுடெல்லி, ஜூன். 25—

பிரதமர் இந்திராகாந்தியின தேர்தல் வழக்கில் அலகாபாத் உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கு, நிபந்தனையுடன் கூடிய இடைக்காலத்தடை உத்தரவு ஒன்றை சுப்ரீம் கோர்ட் பிறப்பித்துள்ளது. அதன்படி அவர் நாடாளுமன்றத்தில உறுப்பினராகவும பிரதமராகவும் நீடிக்கலாம் ஆனல் அவருக்கு ஓட்டுப்போட உரிமையில்லை.

ரேபரேலி தொகுதியிலிருந்துநாடாளுமன்றத்துக்கு தாம தேர்ந்தெடுக்கப்பட்டது செல்லாது என்று அலகாபாத் உயர்நீதி மன்றம் அளித்த தீர்ப்புக்கு முழுமையான நிபந்தனையற்ற தடை விதிக்க வேண்டும் என்று கோரி பிரதமர் இந்திராகாந்தி சுப்ரீம் கோர்ட்டில கடந்த திங்கட்கிழமை மனு தாக்கல் செய்தார்.

இந்த மனுவின் மீது, சுப்ரீம்கோர்ட் விடுமுறைகால நீதிபதி வி ஆர் கிருஷ்ணய்யர், 24-ந்தேதி நிபந்தனையுடன் கூடிய இடைக்கால தடையை வழங்கியுள்ளார், இந்த உத்தரவுப்படி இந்த ஸ்டே உத்

(2-ம் பக்கம் பார்க்க)

சாத்தூர் தாலுகாவில் கட்சி-'தீக்கதிர்' வளர்ச்சி நிதி

முகவை மாவட்டம்சாத்தூர் தாலுகாவில்.கடந்த 8, 9, 14 ஆகிய தேதிகளில் நடந்த கட்சி-தீக்கதிர் நிதியளிப்புகூட்டங்களில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச்செயலாளர் தோழர் ஏ. பாலசுப்ரமண்யம் கலந்து கொண்டு பேசினர்.

கடும் வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கும் இந்த நேரத்திலும், சாத்தூர்தாலுகாவில் உள்ள உழைக்கும் மக்கள் தங்கள் உற்ற தோழனை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட கட்சி வளர்ச்சிக்கும் தங்களதுகுரலை எதிரொலிக்கும 'தீக்கதிர்' நாளேட்டின் வளர்ச்சிக்கும் மொத்தம் ரூ 2309 நிதியை தோழர் ஏ. பாலசுப்ரமண்யத்திடம் வழங்கினர்.

சிவகாசியில் ரூ 859

சிவகாசியில் கடந்த 8 ந்தேதியன்று தோழர் பி பாலசுப்ரமண்யம் தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில் சிவகாசி சார்பில் ரூ 808ம் ஆலமரத்துப்பட்டி சார்பில் ரூ 51-ம் ஆக மொத்தம் ரூ 859 வழங்கப்பட்டது.

இக்கூட்டத்தில் தோழர்கள் ஜெ. லாசர், வி. சின்னையா, தாலுகாச்செயலாளர் தோழர் எஸ், ஏ. பெருமாள் ஆகியோரும பேசினா,

சாத்தூரில் ரூ. 650

சாத்தூரில் கடந்த 9 ந் தேதியன்று தோழர் எஸ். செல்லச்சாமி தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில் சாத்தூர் சார்பில் ரூ. 600-ம் எம் சுப்பையாபுரம் சார்பில் ரூ 20-ம் பி. லட்சுமிபுரம் சார்பில ரூ 10-ம் சின்னககாமன் பட்டி சார்பில் ரூ, 20-ம் நிதி வழங்கப்பட்டது.

இக்கூட்டத்தில் எஸ் ஏ. பெருமாள். எஸ்.எம். ஐ. மாநிலச்செயலாளா சு. பாலதண்டாயுதபாணி ஆகியோரும பேசினர்.

விருதுநகரில் ரூ. 850

விருதுநகரில் 14ந் தேதியன்று தோழர் ஜான்மருதநாயகம் தலைமையில் நடந்த கூட்டத்தில்விருதுநகர் சார்பில ரூ. 600ம், மல்லாங்கிணறு அய்யனர் மில்ஸ் தொழிலாளர் சார்பில் ரூ. 250ம நிதி அளிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் தோழர்கள் கே. சுப்பாரெட்டி, நகரச் செயலாளா பி சீனிவாசன், எஸ். ஏ. பெருமாள் ஆகியோரும பேசினர்.

பொன்னமராவதியில் ரூ. 251

புதுக்கோட்டை மாவட்டம் பொன்னமராவதியில் கடந்த 18-ந் தேதியன்று நடந்த நிதியளிப்புக் கூட்டத்தில், கட்சியின் மாநில செயற்குழு உறுப்பினர் தோழர் ஆர் உமாநாத்திடம் முதல் தவணையாக ரூ 251ஐ தோழர் கே சின்னையா வழங்கினர்.

தோழர் பழனிச்சாமி தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் தோழர்கள் மாரியப்பன், கே கிருஷ்ணன் சண்முகம், சுப்பையா ஆகியோரும் பேசினர்.

அரிசி கேட்ட மக்கள் மீது போலீஸ்— அடிதடி கண்ணீர் புகை

ஸ்ரீநகர், ஜூன். 25—

காஷ்மீர் மாநிலத்தின் பாராமுலா நகர் மக்கள் ஆட்டா மாவுக்குப் பதில் அரிசி கொடுக்குமாறு ஆர்ப்பாட்டம் நடத்தினர்கள். அவர்கள் மீது போலீசார் தடியடியும் கண்ணீர்ப்புகைக் குண்டும் பயன்படுத்தினர்.

ரேஷன் கார்டுகளுக்கு கூடுதலாக ஆட்டா மாவு கொடுக்கப்பட்டது. கூடுதலாக கொடுக்கப்படும் மாவிற்குப் பதிலாக அரிசி கோரினர் அந்நகர மக்கள். இதனை பல நாட்களாக வற்புறுத்தி வந்த அந்நகர மக்கள இன்று ரேஷன் கடைகள் முன்பு ஆர்ப்பாட்டம் நடத்தினர். ஆர்ப்பாட்டம் நடைபெறுவதற்கு முன் பெரும் ஊர்வலம ஒன்றை நடத்தினர்.

போலீசார் ஆர்ப்பாட்டக்காரர்களை கலைந்து செல்லுமாறுகட்டாயப்படுத்தியதால் இரு சாராருக்கும் மோதல் ஏற்பட்டது.

அதனைத் தொடர்ந்து போலீசார் தடியடியையும் கண்[illegible] புகைக் குண்[illegible] வீச[illegible] தொடுத்[illegible]னர்.

[illegible] இ[illegible]ரில் [illegible]6 [illegible]ந்தை [illegible]த்துள் [illegible]தில் [illegible]கிழமை [illegible]பட்டது. [illegible]பாகவே [illegible]யடியும் [illegible]

போலீஸ்— மாணவர் மோதல்

இந்தூர், ஜூன். 24—

மத்திய பிரதேசத்தில் உள்ள பல்கலைக் கழகங்களின் கல்லூரிகளின் ஆசிரியர்கள் வேலைநிறுத்தப் போராட்டமும், ஆர்ப்பாட்டமும் நடத்தி வருகிருர்கள். பல்கலைகழகமானிய கமிஷன் சிபாரிசுகளை அமுல் நடத்துமாறு கோரியே ஆசிரியர்கள் போராட்டம் நடத்துகின்றனர்.

ஆசிரியர்களின் கோரிக்கைகளுக்கு மாணவர்களும ஆதரவு நலகின்றனர். அதனுல் பட்ட மேற்படிப்பு மாணவர்கள் பெரும் பகுதியினர் தேர்வு எழுதவில்லை. ராய்புரம் என்னும நகரத்தில உள்ள அரசு கல்லூரி மாணவர்கள் ஆசிரியர்களுக்கு ஆதரவாக ஆர்ப்பாட்டம் நடத்தியதில் அம் மாணவர்களுக்கும், போலீசுக்கும் மோதல் ஏற்பட்டது மோதலில் 12 போலீசாரும் 10 மாணவர்களும் காயம அடைந்தனர். தடியடியைத் தவக்கிய போலீசார் கண்ணீர் புகைக் குண்டுகளை வீசினர்.

போலீசுக்கும், மாணவர்களுககு மிடையே ஏற்பட்ட இம்மோதல் தொடர்ச்சியாக நகரில 144 தடையுத்தரவு 7 நாட்களுக்கு விதிக்கப்பட்டுள்ளது.

கண்ணீர்ப் புகைகுண்டு வீச்சும் நடைபெற்றன.

தீக்கதிர்

ராஜினாமா செய்க

இந்திராகாந்தி தேர்தல் செல்லாது என்று அலகாபாத் நீதிமன்றம் அளித்த தீர்ப்பின் மீது, சுப்ரீம் கோர்ட் முடிவு கூறும்வரையில், அலகாபாத் தீர்ப்பை அமுல் நடத்துவதில் தடைவிதிக்கக் கோரி இந்திராகாந்தி சார்பில் தாக்கல் செய்யப்பட்டிருந்த "ஸ்டே" மனுவின் நேற்றுசெவ்வாய் சுப்ரீம்கோர்ட்டு முடிவு வெளியாகியுள்ளது.

நிபந்தனையற்ற தடை கோரப்பட்டிருந்தது. ஆனால் நிபந்தனைகளுக்குட்பட்டே "ஸ்டே" ஆர்டர் வழங்கப்பட்டுள்ளது.

இந்திராகாந்தி லோக் சபையில் அங்கத்தினராக வருகை பதிவேட்டில் கையெழுத்திடப்படும் ரிஜிஸ்டரில் கையெழுத்திடலாம். ஆனால் லோக்சபை உறுப்பினர் என்ற ஹோதாவில் லோக்சபை விவாதங்களில் பங்கெடுத்துக் கொள்ளக்கூடாது, வோட்டுப் போடக்கூடாது. உறுப்பினர் சம்பளமும் வாங்கக்கூடாது.

ஆனால், இதே சமயத்தில் பிரதம மந்திரியாக அவர் இருக்கும் வரையில் லோக் சபை, ராஜ்யசபை கூட்டங்களில் விவாதங்களில் பங்கெடுத்துக் கொண்டு பிரதமருக்குள்ள சம்பளத்தையும் வாங்கலாம். ஆனால் வோட்டுப் போடு உரிமை கிடையாது.

இந்த அடிப்படையில் அலகாபாத் தீர்ப்பு, சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு முடிவுறும் வரையில், தடுத்து நிறுத்தப்பட்டிருக்கிறது. அவரது லோகசபைத் தேர்தல் செல்லாது என்ற உயர்நீதிமன்ற முடிவும் 6 வருடம் தேர்தலுக்கு நிற்கக்கூடாது என்ற தீர்ப்பும் தடுத்து நிறுத்தப்பட்டிருக்கின்றன என்பதன் பொருள். ஆயினும் லோகசபை உறுப்பினர் பதவியை அவர் இந்த இடைக்காலத்தில் உபயோகிப்பதில் சில நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன.

"இந்த அப்பீல் வழக்கில் அப்பீல் வாதியின்—(இந்திரா காந்தியின்) லோகசபை உறுப்பினர் பதவிதான் சம்பந்தப்பட்டிருக்கிறதென்பதும், பிரதம மந்திரி என்ற அவரது பதவி இவ்வழக்கில் நேரடியாக இக்கோர்ட்டின் முன் எழும் ஒரு பிரச்சினை அல்ல என்பதும், தெளிவு" என்று சுப்ரீம்கோர்ட் விடுமுறைக்கால நீதிபதி வி ஆர். கிருஷ்ணய்யர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் பிரதம மந்திரி என்ற அந்தஸ்து, அரசியல் சட்டப்படி, அவருக்கு லோக் சபையிலும் ராஜ்யசபையிலும் கலந்து கொள்வதற்கும் பேசுவதற்கும், மற்றும் சில பொறுப்புக்களை பிரதம மந்திரியாக நிறைவேற்றுவதற்கும் உரிமைகளை அளித்துள்ளது. அவற்றை அவர் உபயோகப்படுத்தலாம். ஆனால் ஓட்டு மட்டும் போடக் கூடாது என்று கூறியுள்ளார் நீதிபதி.

இந்திராகாந்தி இனித் தடையின்றிப் பிரதமராக இருக்க சுப்ரீம் கோர்ட்டு அனுமதித்து விட்டது என்று காங்கிரஸ் தலைவர்கள் [கூட்டம்போட்டு] அறிவித்திருக்கிறார்கள். இந்த "ஸ்டே" மனுவின் தீர்ப்புக்குப்பின்னரும் இந்திராகாந்தி உடனே ராஜினாமா செய்யவேண்டிய அவசியத்தையும், நியாயத்தையும் ஏற்க மறுக்கிறார்கள்.

அலகாபாத் உயர் நீதிமன்றத்தீர்ப்பில் இந்திராகாந்தியின் பெயருக்கு ஏற்பட்ட இழுக்கு ஒருக்காலும் மறைந்து விடவில்லை.

"இந்தத்தேர்தல் சட்ட விரோதமானது என்று உயர் நீதிமன்றம் செய்துள்ள முடிவை லேசாக நான், இந்த ஆரம்ப கட்டத்தில், நிராகரிக்க முடியாது" என்று—

மற்றொரு இடத்தில், "உயர் நீதிமன்றத்தீர்ப்பு மாற்றப்படும வரை அது உறுதியாக நிற்கும்" என்றும்—நீதிபதியே நேற்றைய உத்தரவில் குறிப்பிட்டிருக்கிறார்.

இப்படிப்பட்ட நிலையில், நிபந்தனைக்குட்பட்ட 'ஸ்டே' ஆர்டரைப் பயன்படுத்திக் கொண்டு இந்திராகாந்தி இன்னும் பிரதமராக நீடிப்பது அர்த்தமற்றது. ஜனநாயக மரபுகளை அறவே கைவிட்டவர்கள்தான் இன்னும் பதவியில் ஒட்டிக் கொண்டிருக்க முடியும். அலகாபாத் ஜட்ஜ்மெண்ட் இன்னும் மாற்றப்படவில்லை. அதன் மீது சுப்ரீம் கோர்ட்டு முடிவு தெரியும் வரையில் சட்டபூர்வமாகவும் சரி, அரசியல் ரீதியிலும் சரி, தார்மீக ரீதியிலும் சரி இந்திரா காந்திக்கு பிரதமராக இருக்க உரிமையில்லை.

பார்லிமெண்டு உறுப்பினராக இருப்பினும் வோட்டுப்போடக்கூடாது என்ற நிபந்தனையை ஓர் உயர்நீதிமன்றம் விதித்த பிறகு, எந்த நாட்டிலாவது ஒரு பிரதம மந்திரி தனது பதவியை ராஜினாமா செய்யாமலிருப்பாரா? மேலும், அலகாபாத் தீர்ப்பு மாற்றப்படாத போதிலும் நான் எப்படியாவது பதவியில் ஒட்டிக்கொண்டு தானிருப்பேன் என்று யாராவது கூறுவார்களா? ஜனநாயக மரபுகளை துச்சமாக மதித்து சர்வாதிகாரத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கும் பாரதப் பிரதமரிடமிருந்தும் அவரது கட்சியினரிடமிருந்தும் தான் இந்தக் கேவலமான நடத்தையைக் காண முடியும்.

பதவியில் நீடித்திருக்கலாம் என்று ஆளுங்காங்கிரஸ் கட்சியினர் முடிவு செய்யலாம். ஆனல் இந்நாட்டு மக்கள் பெரும்பாலும் அதை நிராகரிப்பார்கள். பல எதிர்க்கட்சித் தலைவர்களின் அறிக்கைகளே அதைசுட்டிக்காட்டுகின்றன. ஏன், இந்த அப்பட்டமான ஜனநாயகவிரோத நடவடிக்கை காங்கிரஸ் கட்சிக்குள்ளேயே பிளவுகளை ஏற்படுத்தினலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

ஜனநாயக மரபு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தரவு அமுலில் இருக்கும் காலம் வரை—இந்திரா நாடாளுமன்றத்தில் ஓர் உறுப்பினராக இருப்பார். சபையில் வைக்கப்பட்டுள்ள வரிசைப்பதிவேட்டில் கையெழுத்திடவும், கூட்டங்களில் கலந்து கொள்ளவும் உரிமை உண்டு ஆனல் நாடாளுமன்ற உறுப்பினர் என்ற முறையில் நாடாளுமன்ற விவாதங்களில் பங்கு கொள்ளவோ ஊதியம் பெறவோ முடியாது.

ஆனல் அவர் பிரதமராகவோ, அமைச்சராகவோ இருக்கும் வரை—பிரதமர் அல்லது அமைச்சர் என்கிற முறையில் இரு சபைகளில—எந்தச் சபையிலும் அல்லது இரு சபைகளில் கூட்டுக் கூட்டத்திலும் பேசவும் விவாதங்களில் பங்குகொள்ளவும். தமக்குள்ள மற்ற அலுவல்களைச் செய்யவும் பிரதமர் என்ற முறையில் சம்பளம் பெறவும் முடியும்.

(தற்போது பிரதமரும் பிற அமைச்சர்களும் அமைச்சர் என்ற முறையில் தான் சம்பளம் பெறுகிறார்கள். உறுப்பினர் என்ற முறையில் அவர்களுக்கு சம்பளம கிடையாது எனவே, இந்திரா காந்தி பெறும் சம்பளம் குறையப்போவது இல்லை.)

ஆனல் ஓட்டளிக்கும் உரிமைக்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது.

இந்த ஸ்டே உத்தரவில் கண்டுள்ள கட்டுப்பாடுகளை மாற்றும்படியோ—அல்லது நிபந்தனையற்ற ஸ்டே அளிக்கும்படியோ கோரி சுப்ரீம் கோர்ட்டின் டிவிசன் பெஞ்சை மனுதாரர் (இந்திராகாந்தி) அணுகலாம். அதேபோல எதிர்மனுதாரரும் (ராஜ்நாராயணன்) டிவிசன் பெஞ்சை அணுகி இந்த ஸ்டே உத்திரவின் உள்ள நிபந்தனைகளை மாற்றும்படி கோரலாம்.

கட்சி ஆபீசுக்குள்:

நுழைந்து போலீஸ் தாக்குதல்

கொல்லங்கோடு. ஜூன் 23—

குமரி மாவட்டம் கொல்லங்கோடில் கடந்த 21-ந் தேதி. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்துக்குள் போலீசார் நுழைந்து. அங்கிருந்த தோழர்களை மிருகத்தனமாகத் தாக்கியுள்ளனர்.

போக்குவரத்துத் தொழிலாளர்களது போராட்டத்துக்கு மார்க்சிஸ்ட் கட்சி முழு ஆதரவு அளித்து வருவதால் அதற்கு வஞ்சம் தீர்க்கும் முறையில் திமுக அரசின் போலீசார். தமிழகத்தில் பல பகுதிகளிலும் மார்க்சிஸ்ட் கட்சி சார்பு மன்றங்களுக்குள் நுழைந்து இது போன்று தொடர்ந்து தாக்கி வருகின்றனா.

அடக்குமுறை — பழிவாங்கலை வாபஸ் வாங்கி

பேச்சுவார்த்தை மூலம் சமரசம்

முதலமைச்சருக்கு உமாநாத் கோரிக்கை

சென்னை. ஜூன், 23—

பழிவாங்கல், அடக்குமுறை நடவடிக்கைகளை வாபஸ் பெற்று, நேரடி பேச்சுவார்த்தை முலம் சமரசத்தை ஏற்படுத்த வேண்டும் என்று முதலமைச்சர் கருணாநிதிக்கு தமிழக சி ஐ டி யூ செயலாளர் தோழர் ஆர் உமாநாத் ஓர் அறிக்கையில் வற்புறுத்தியுள்ளார். அறிக்கை வருமாறு:—

மாநில அரசு போக்குவரத்து, பல்வேறு போக்குவரத்துக் கழகங்கள் ஆகியவற்றின் ஊழியர்கள் வேலை நிறுத்தம் மேற்கொண்டு 8நாட்கள் ஆகின்றன. இந்த நிலையில் மாநில அரசாங்கம் செய்துள்ள ஒரே காரியம் சுமார் 2000 ஊழியர்களை சிறையில் அடைத்து. சுமார் 1500 ஊழியர்களை சஸ்பெண்ட் செய்துள்ளது என்பதுதான்.

தகராறைத் தீர்ப்பதற்கானநிலையைத்தயார்படுத்துவதற்குப் பதிலாக அரசாங்கம் இவ்விதம் நடவடிக்கை எடுத்துள்ளதானது பல ஆயிரம் ஊழியர்கள் மனக்கசப்பு அடையவே செய்துள்ளது.

இத்தகராறில் முதலமைச்சர் தலையிட்டு கைதான அனைவரையும் விடுதலை செய்ய வேண்டும். எல்லா வழக்குகளையும் வாபஸ் பெறவேண்டும். அன்றாட ஊதியம் பெறுகின்ற ஊழியர் தற்காலிக ஊழியர்கள் உட்பட சஸ்பெண்ட் செய்யப்பட்ட வேலையிலிருந்து நீக்கப்பட்ட ஊழியர்களை மீண்டும் வேலைக்கு எடுத்து கொள்ள வேண்டும். தவிர முதலமைச்சர் இதர முக்கிய விஷயங்கள் குறித்து நேரடியான பேச்சு மூலம் சமரசத்தை ஏற்படுத்த வேண்டும்.

இடிக்கியில் வேலைநிறுத்தம்

ஏஐடியூசியின் கருங்காலித்தனம்

கோட்டாயம், ஜூன். 23—

கேரளத்தின் இடிக்கி ஹைட்ரோ எலக்ட்ரிக் திட்டத்தில் வேலை செய்யும் தொழிலாளர்களும் ஊழியர்களுமாக 2400 பேர் ஒற்றுமையாக வேலைநிறுத்தம் செய்கின்றனர் இதனல் அத்திட்டத்தில் வேலை அனைத்தும் ஸ்தம்பித்தது.

ஏ. ஐ. டி. யூ. சி. யின் கருங்காலித்தனம்

அனைத்து சங்கங்களும் இக்காலவரையற்ற வேலை நிறுத்தத்திற்கு — சிஐடியூ முதல் ஐ என் டி யூ சி வரை தொழிலாளர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளன.

ஆனல் டிரைவர்கள் சங்கம் வைத்துள்ள ஏ ஐ டி யூ சி மட்டும் வேலைநிறுத்தத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து கருங்காலி வேலை செய்கிறது.

இத்திட்டத்தில் வேலை செய்துவந்த 600 தொழிலாளர்களை காண்ட்ராக்டர் வேலை நீக்கம் செய்ததை கண்டித்தே இவ்வேலை நிறுத்தம் நடைபெறுகிறது, காண்ட்ராக்டர்களின் கையாட்களைப் போல் செயல்படும் ஏ ஐ டி யூ சி வேலை நிறுத்தத்திற்குஎதிர்ப்புத் தெரிவித்த போதிலும் அவர்களை எந்தத் தொழிலாளியும் பொருட்படுத்தாததால் வேலைநிறுத்தம் முழுமையாக நடைபெறுகிறது

வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்க

மார்க்சிஸ்ட் கட்சி கூறும் பாதை

கல்கத்தா, ஜூன் 25—

சமுதாயத்தின் பல்வேறு பகுதிகளிலுமுள்ள தொழிலாளர்கள், விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள், சிறுமுதலாளிகள், வியாபாரிகள், ஊழியர்கள், டாக்டர்கள், வழக்கறிஞர்கள் ஆகிய சகல பகுதியினரும் விலைவாசி உயர்விலும், வேலையில்லாத் திண்டாட்டத்திலும், அதீத வரிகளினலும், பணவீக்கத்தினலும், ஊதிய முடக்கத்தினலும் எண்ணிலா இன்னல்களை அனுபவித்து வருகிறார்கள்.

ஆதிக்க வர்க்கங்களும் அவர்களது அரசாங்கமும் ஏற்படுத்தி விட்ட நெருக்கடியின் சுமைகளை, அவர்கள் தான் சுமக்க வேண்டுமே தவிர, ஏனைய மக்களின் மீது சுமத்துவது அக்ரமத்திலும் அக்ரமம் அல்லவா!

நாட்டு மக்களைப் பாதுகாக்க வேண்டுமானல். ஆட்சியாளர்களின் கொள்கைகளில் அடியோடு மாற்றம் வேண்டுமென வெகுஜனப் போராட்டங்கள் நடைபெற வேண்டுமென்றும் — அதற்காக கீழ்க்கண்ட கோரிக்கைகளை முன்வைக்க வேண்டுமென்றும இந்திய கம்யூனிஸ்ட் கட்சி [மார்க்சிஸ்ட்] பொலிட்பீரோ கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

லே-ஆப் காலத்துக்கு முழுச் சம்பளம் தருக!

1. லே-ஆப் விடுவதை அரசு அனுமதிக்கக் கூடாது. லே-ஆப் விடப்பட்ட இடங்களில், லே-ஆப் காலத்துக்கு முழுச்சம்பளம் நட்ட ஈடாக தரப்பட வேண்டும். சிறுதொழில்களுக்கும் இது பொருந்தும்.

ஆள் குறைப்பு கூடாது

2. தொழிற்சாலையை மூடுவதையும் அனுமதிக்கக் கூடாது. ஆள்குறைப்புச் செய்வதையும் அனுமதிக்கக் கூடாது.

வேலையிழந்தவர்களுக்கு

3. வேலையிலிருந்து தள்ளப்பட்டவர்களுக்கு ஆலை அதிபர்களாயினும சரி, அரசாங்கமாயினும் சரி, முழுச் சம்பளம் தரவேண்டும்.

வேலையற்றவர்களுக்கு

4. நகர்ப்புறத்திலும் நாட்டுப் புறங்களிலும் வேலையில்லாது வாடுடவர்களுக்கு, வேலையில்லாக்காலத்தில் உதவிப் பணம் கொடுக்க வேண்டும்.

கிராமங்களில் வேலை

5. கிராமப்புறங்களில் வேலை வாய்ப்புத்திட்டங்களை அதிக அளவில் நிறைவேற்றவேண்டும் அவை தொழிற்சங்கங்கள், விவசாயத்தொழிலாளர் சங்கங்களின் மேற்பார்வையின் கீழ் நடைபெறவேண்டும்,

மூடப்பட்ட ஆலைகளைத் திற!

6 மூடப்பட்டுக்கிடக்கும் தொழிற்சாலைகளையும் தோட்டங்களையும் உடனேடியாகத்திறந்து, அவற்றின் முழுத்திறன் அளவுக்கு உற்பத்தியை முடுக்கிவிடவேண்டும்.

உணவுவிநியோகம்

7 நிலப்பிரபுக்களிடமுள்ள உணவு தானியச் சேமிப்பு மீதும். மொத்தவிற்பனையாளர் மீதும், விநியோகத்தின் மீதும் அரசு ஆதிக்கம் வேண்டும். இவையெல்லாம் பொதுஜனக்கமிட்டிகளின் மேற்பார்வையின்கீழ் நடைபெற வேண்டும்.

விலைவாசிகளைக்குறை

8 வாழ்க்கையின் அன்றாடத்தேவைப்பண்டங்களின் விலைவாசிகளைக் குறைப்பதின் மூலம், இதர எல்லாப்பொருள்களின் விலைவாசிகளையும் குறைத்திடவேண்டும்.

நிலத்தையும் தொழிலையும் தேசவுடைமைஆக்கு

9 ஏகபோக முதலாளிகளுக்குச் சொந்தமான தொழில்களை தேசவுடைமை ஆக்கவேண்டும். நிலப்பிரபுத்துவத்தையும் ஒழிக்கவேண்டும்.

இத்திட்டங்கள்தான் இன்றைய பொருளாதார நெருக்கடியிலிருந்து வேலையிலலாத் திண்டாட்டத்திலிருந்தும நாட்டுமக்களைக் காக்கவல்லது என்று பொலிட்பீரோ எடுத்துக்காட்டியுள்ளது;

ஆசிரியர்களுக்கு மீண்டும் வேலைதர

பள்ளி நிர்வாகி இணங்கினர்

மதுரை, ஜூன். 25—

மதுரை பிள்ளைமார் சங்க உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்கள் போராட்டத்தில் பேச்சுவார்த்தைநடந்துவருவதால், அந்த ஆசிரியர்களது போராட்டம் ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக நடவடிக்கை குழு கன்வீனர் எம் பாண்டி அறிவித்துள்ளார்.

கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு வேலையிலிந்து நீக்கப்பட்டு கஷ்டத்துக்கு ஆளாக்கப்பட்டு வரும் 12 ஆசிரியர்—ஆசிரியைகளுக்கு மீண்டும் வேலை கோரியும், அந்த 2 ஆண்டுகளுக்குரிய சம்பளம் கோரியும் போராட்டம் நடந்து வருகிறது.

முதல் கட்டமாக கலெக்டா ஆபீஸ் முன்பு தொடர் உண்ணாவிரதம் இருந்த ஆசிரியர்கள், 2வது கட்டமாக 25ந்தேதி பள்ளிமுன் காலைமுதல் மாலைவரை தொடர் ஆர்ப்பாட்டம்நடத்த திட்டமிட்டிருந்தனர். ஆனல் பேச்சுவார்த்தை நடத்தவும், உடன்பாடுகாணவும் பள்ளிநிர்வாகி இணங்கி வந்துள்ளதால் போராட்டம் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. நீக்கப்பட்ட ஆசிரியர்களுக்கும் மீண்டும் வேலை தருவதாகப்பள்ளி நிர்வாகி கடந்த 23ந்தேதி நடந்த பேச்சுவார்த்தையில் ஒப்புக்கொண்டார்.

காவல்துறைகண்காணிப்பாளர் ராஜசேகரன் நாயர், சண்முயிரம ஆகியோர்முன்நிலையல் நடந்த இப்பேச்சுவார்த்தையில்பள்ளிநிர்வாகி சிவசுப்ரமண்யமும், ஆசிரியர்கள் சார்பில்போராட்டக்குழு கன்வீனர் எம். பாண்டியும் கலந்துகொண்டனர்.

இந்த இடைப்பட்ட இரண்டு காலச்சம்பளம் குறித்தும் மற்ற விஷயங்கள் குறித்தும். மதுரை முதன்மைக் கல்லூரி அதிகாரிமுன்னிலையில 26ந் தேதி நடக்கும் பேச்சுவார்த்தையில் முடிவு காணப்படும் என்றும் அறிவிக்கப்படடுள்ளது,

---

கூட்டாளி நாடுகளை மிரட்டுகிறார் கிசிங்கர்

அட்லாண்டா, ஜூன். 24—

அமெரிக்காவின் கூட்டாளி நாடுகள் அமெரிக்காவின் நலனுக்காகவே கூட்டாளியாக இருப்பதாக கற்பனை பண்ண வேண்டியதில்லைஎன அமெரிக்கவெளிநாட்டமைச்சர் கிசிங்கர் குறிப்பிட்டார்.

மேலும் எந்த ஒரு கூட்டாளி நாடும் தனது தேசிய நலன் கொள்கைகளை மாற்றிக் கொள்கிறதா அந்நாடு, அமெரிக்காவும தனது ஒப்பந்த உறவை செயல் படுத்தவோ அல்லது ஒரு முடிவுக்கு கொண்டுவரவோதயாராக இருக்கிறது என்பதையும் பார்க்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

உறவை முறித்துக் கொள்ளப் போவதாக மிரட்டுவதின் மூலம் எந்த ஒரு கூட்டாளி நாடும் எங்களைநிர்ப்பந்திக்க முடியாது. அமெரிக்காவின் பாதுகாப்பைக் காட்டிலும் எங்களுக்கு கூட்டாளிகளின் பாதுகாப்பு முக்கியமானதல்ல என்றும் அவர் கூறினர்.

எனவே அமெரிக்காவின் கூட்டிலிருந்து விலகிக் கொள்ளப் போவதாக எந்தவொரு நாடும் எங்களை மிரட்டி நிர்ப்பந்திக்க வேண்டாம் என்றும் எச்சரித்தார்.

போலீஸ் அக்கிரமத்தை எதிர்த்து

சிவகெங்கை 'பந்த்'

அனைத்துக் கட்சி முடிவு

சிவகெங்கை, ஜூன். 23—

மாநில அரசு ஊழியர் ஒருவரது குடும்பத்தையே போலீஸ் நிலையத்திற்கு அழைத்துச்சென்று கொடுமைப்படுத்தியதாகவும், அந்த ஊழியரின்வயது வந்தபெண்ணை கடத்திச்சென்று மானபங்கப்படுத்திய தாகவும் கூறப்படும் சிவகெங்கை போலீசைக் கண்டித்து சிவகெங்கை முழுதும் 'பந்த்' நடத்தப்படுகிறது.

இந்த 'பந்த்' இம்மாதஇறுதியில் அல்லது ஜூலைமுதல் வாரத்தில் நடக்கும்.

இங்கு நடந்த அனைத்துக கட்சிகள் தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் கூட்டத்தில் இந்த 'பந்த். நடத்துவதற்கான முடிவு எடுக்கப்பட்டது.

கே, ஆர், உயர் நிலைப்பள்ளியில் நடந்த இக்கூட்டத்துக்கு சட்டமன்ற திமுக உறுப்பினர்: சி. சேதுராமன் தலைமைவகித்தார்.

என். ஜி. ஓ. சங்கம் சார்பில் பி. ராமசாமி, நகரசபைத் தலைவர் சாத்தையா மற்றும் பஞ்சவர்னம் (மார்க்சிஸ்ட) முனியாண்டி (அதிமுக) மலைச்சாமி (இந்திரா காங்கிரஸ்) சண்முகம் (சோசலிஸ்ட்), சி. நாராயணன் (திமுக) ஆகியோர் கலந்து கொண்டனர்.

போலீசாரின் அக்கிரமத்தைக் கண்டித்தும், சம்பந்தம்பட்ட போலீசாரை சஸ்பெண்ட் செய்து நீதி விசாரணை நடத்தும் படியும் வற்புறுததப்பட்டது.

போராட்டத்தை நடத்த 21 பேர் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டது. இக்குழுவிலிருந்து ஐவர் மாவட்ட ஆட்சித் தலைவரை சந்தித்து. கோரிக்கைகளை வற்புறுத்துவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

பஸ் தொழிலாளர் மறியல்

நாகர்கோவில், ஜூன். 25—

கட்டபொம்மன் போக்குவரத்துக்கழக ஊழியர்கள் நேற்று (செவ்வாய்) 9வது நாளாக நகரசபை பஸ் நிலையம் முன்பு மறியல் செய்தனர். மறியல் செய்த 7பேரையும் போலீசார் கைது செய்தனர்.

இந்திய [illegible] ஸ்ட் [illegible] சி [illegible] ஸ்ட்) [illegible] ழ் மாநி [illegible] ழ சார் [illegible] தீக்க [illegible] தி 16-16 [illegible]

தற்கொலைக்கும் சமூக அமைப்புக்கும் சம்பந்தம் இல்லையா?

சோழவந்தான், ஜூன். 25—

இராமநாதபுரம் மாவட்டம் கொண்டி என்ற கிராமத்தைச் சேர்ந்த ஒரு வாலிபன் ஊரில் மழை தண்ணீர் ஏதுமில்லாததால்—பிழைப்புக்கு எந்த வழியுமில்லாத நிலையில்—பிறந்த ஊரை விட்டு பஞ்சம் பிழைக்க மதுரையடுத்த சோழவந்தானுக்கு வந்தார்.

பல இடங்களில் கூலிவேலை கேட்டு அலைந்தார் வேலை ஏதும் கிடைக்கவில்லை.

பிச்சை எடுத்து வாழ்ந்தார், பட்டினி கிடந்து பல நாட்களைக் கழித்தார் அதற்குமேல் இந்த துன்ப வாழ்க்கையைத் தாங்குப்பிடிக்க முடியவில்லை.

தண்டவாளத்தில் வாழ்வு முடிந்தது

கடந்த 22ந் தேதி ஞாயிற்றுக்கிழமை. ரயில்வே பாதையை நோக்கி நடந்தார்.

இரயில் புகையைக் கக்கிக் கொண்டு, விசில் அடித்துக் கொண்டு வேகமாக வந்து கொண்டிருந்தது,

ஓரமாக ஒதுங்கி நிற்பவர்போல் நின்ற அவர். இந்த உலக வாழ்வையே முடித்துக் கொள்ள கனரநேரத்தில் முடிவெடுத்தார். ரயில் பத்தடி தூரத்தில் பேரிரைச்சலுடன் வரும்போது, திடீரென தண்டவாளத்தில் விழுந்தார்.

உடல் சுக்குநூறாயிற்று. இளம் வாலிபனின் இரத்தம் பீச்சியடித்தது. பிறந்த மகன் மாண்டு போனன் என்ற செய்தி பெற்ற தாய்க்கு எட்டினல் எப்படி இருக்குமோ?

இப்படி ஒன்று இரண்டா? ஒருநாளா? இருநாளா?

கிணற்றில் கூண்டோடு மாண்டனர்

இதோ, அதே, மதுரை மாவட்டத்தில், நத்தம் போலீஸ் சரகத்தைச் சேர்ந்த பட்டினம் என்ற கிராமத்தில் ஓர் நல்லதங்காள் கதையே நடந்துவிட்டது. பிடாரியம்மாள் என்பவரின் கணவர் ஒரு குத்தகை விவசாயி. அந்த குத்தகை நிலம் பறிபோய்விட்டது.

அடுத்து என்ன? மான மரியாதையுடன் குடும்பத்தைக் காப்பாற்ற வழி ஏதும் தெரியவில்லை. மனமுடைந்தாள் பிடாரியம்மாள். இம்மாதம 23ந் தேதியன்று, நேரே கிணற்று மேட்டுக்குப் போனள். அவள் பெற்றெடுத்து பாராட்டிச் சீராட்டி வளர்த்த 5 குழந்தைகளும் பின் தொடர்ந்தன.

சிறிதும் அவள் தயங்கவில்லை. கத்தரிக்காயை வீசியெறிவதுபோல, 5 குழந்தைகளையும் ஒன்றன்பின்னொன்றாகத் தூக்கி கிணற்றில் எறிந்தாள் அப்புறம் யார்?

குழந்தைகள் மூழ்கி மூழ்கி மூச்சை நிறுத்தும் முன்னே, இந்தக் கலியுக நல்ல தங்காளும் கிணற்றில் குதித்து வாழ்வை முடித்துக் கொண்டாள்.

குலக் கொடியே அருந்துபோன கோரத்தை அவளது கணவன் அறிந்தபின், அவனது நிலை என்னவாயிருக்குமோ?

பாடை ஏறுகின்ற சோசலிசம்

ஒரு வீட்டிலிருந்து 6 பிணங்கள் பாடை ஏறுகின்றன. அந்த ஊர் மக்களுக்குத்தான் எப்படியிருக்கும்?

மாடுகட்டிப் போரடித்தால் மாளாது செந்நெல் என, ஆனைகட்டிப் போரடிக்கும் அழகான தென்மதுரையிலதான் இது நடந்தது.

தென் மதுரையில் மட்டுமென்ன? சோழ வளநாடு சோறுடைத்து என்பார்களே, அங்கும் இதே கொடுமைதான்! பைங்கிறப் பழமை பசிபிலாதளிக்க மைநிற முகில்கள் வழங்கும பொன்னாட்டிலும் இதே கோரமதான்.

வறுமையே வெளியேறு என்ற இந்திராமுழக்கிய முழக்கத்தின் லட்சணம் இதுதான்.

சமதரும சமுதாயம் மலராத வரையில் தற்கொலை எண்ணிக்கை ஏறிக் கொண்டுதான் இருக்கும்,

இந்த பயங்கரச் சுழல் நமது வீட்டுக்கும்வராது என்று நிச்சயமாகச் சொல்லமுடியுமா? வரு முன்னர் காக்க வரிந்து கட்டவேண்டாமா?